பெண்கள் கல்வி
ஆய்வு நிறுவனம்

# பிரவாகினி

செய்தி மடல்

ஆனி/மார்கழி 2015 இதழ் 37


அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் எமக்கு கிடைக்கும் தகவல்களை வைத்துப் பார்த்தால் இன்று பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துள்ள மையை காணக்கூடியதாக உள்ளது. சம்பவங்கள் நடைபெறும்போது அரசியல்வாதிகள், தொண்டர் அமைப்புக்கள் இவற்றுக்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள். யாழ் புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா, முன்பள்ளி மாணவி சேயா செதவ்மி ஆகியோரின் கசப்பான சம்பவங்களின் போது மக்களின் குரல்கள் உரக்க ஒலிக்கத் தவறவில்லை. அது பாராளுமன்றத் திலும் எதிரொலித்தது. சிறுவர், பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான சட்டங்கள் மேலும் அதிகரிக்க வேண்டும், மரண தண்டனை அமுல்படுத்தப்பட வேண்டும், வேண்டாம் என்ற வாத பிரதிவாதங் கள் இடம்பெறுகின்றன. சிறுவர்களுக்கெதிரான வன்முறை கள் தொடர்பாக இவ்வருடத்தின் 9 மாத காலப்பகுதிக்குள் 6499 புகார்கள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. இதில் சிறுவர் களுக்கெதிரான குரூர செயற்பாடுகள் (308 (ஏ) தொடர்பில் 1383 புகார்கள் காணப்படுவதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் தகவல் பிரிவின் பிரதி முகாமையாளரான எதிரிவீர குணசேகர தெரிவித்துள்ளார்.

வித்யா, சேயா செதவ்மி ஆகி யோரின் கொடூரமான சம்பவங் களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணை கள் முன்னெடுக்கப்படுகிறது. தண்டனைகள் வழங்கப்படுமா? நீதி சரியான முறையில் கிடைக்குமா?

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான துரதிஷ்டமான சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பது அவசியம். பெண்கள், சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகம், படுகொலைக்கு எதிராக புதிய சட்டம் ஒன்றை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டு மென்ற கோரிக்கை வலுப் பெற்றுள்ளது.

இவ்வாறு பெண்களுக்கு இழைக்கப்படும் அடக்குமுறை களுக்கு மத்தியிலும் பெண்கள் தமது இலக்கை அடைவதில் முனைப்பாகவே உள்ளனர். சினிமா மற்றும் அச்சு, இலத்திரினியல் ஊட கங்கள் பெண்ணின் கவர்ச்சியை காட்சிப் பொருளாக வெளிப்படுத்தி வருவது வேதனைக்குரிய விடய மாகும்.

சமூகநலனுக்காக உத்தேசித்து தம்மை அர்பணித்த சோமலதா சுபசிங்ஹ அவர்களை இலங்கை நாடக அரங்கியல் வரலாற்றில் ஒரு மைல்கல் என வர்ணிக்கலாம். நடிகை, இயக்குநர், நாடக விரிவுரை யாளர் என பல்வேறு பரிமாணங் களை கொண்டவர்,

## இந்த இதழில்....


- தூய்மை, துடக்கு, பெண். 02
- பெண்ணின் கவர்ச்சியை காட்சிப் பொருளாக்கும் ஊடகம் 04
- நாடக அரங்கியலில் தத்துப்பிள்ளை: சோமலதா சுபசிங்ஹ 05
- ஓவியங்கள்தான் என் ஆயுதம் 06
- கருத்தடை ஏன் சட்டமாகக் கூடாது. 08
- பெண்ணினத்தை போற்றுவோம். 09
- இராஜம் கிருஷ்ணன். 11


2014ஆம் ஆண்டு அக்டோபர் 20 ஆம் திகதி மறைந்த ராஜம் கிருஷ்ணன் பெண்களது வாழ்வை மிக நுணுக்கமாக, சரளமான தமிழ் நடையில் சித்திரித்து பல இலக்கியப் படைப்புகளை ஆக்கியுள்ளார். சாகித்ய அகாதமி விருது 1973, பாரதீய பாஷா விருது 1975, சோவியத்நாடு நேரு விருது 1975, நியுயார்க் ஹெரால்டு சர்வதேச விருது 1950 (பெண்ணிலைவாதப் பார்வையை வெளிப்படுத்தும் எழுத்துகளுக்காக ஆசியாவிலிருந்து

ஒருவரைத் தேர்வு செய்து வழங்கப் படும் விருது), கலைமகள் நாராயண சாமி விருது 1953, திரு.வி.க. விருது 1991, என்று அவரது இலக்கியச்சிந்தனைக்குரிய பலதரப்பட்ட விருதுகள் ஏராளம். பட்டியலிட முடியாத அளவு நூல்களை இவர் வெளிக்கொணர்ந்துள்ளார். இவ்வாறான பெருமைகளை தன்னகத்தே கொண்டிருந்த ராஜம் கிருஷ்ணன் தொடர்பான கட்டுரைகளை இந்த சஞ்சிகை தாங்கி வருகிறது. மறைந்த ராஜம் கிருஷ்ணன் அவர்களுக்கு இச் சஞ்சிகையை அர்ப்பணிக்கின்றோம்.

இச் சஞ்சிகையில் எமது நிறுவனத்தினால் இக் காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பானவையும் அடங்கியுள்ளன.



சாந்தி சச்சிதானந்தனின் அண்மைய இழப்பு பெண்ணிலைவாத இயக்கத்திற்கு ஒரு பேரிழப்பாக கருதப்படுகிறது. இவர் ஒரு தீவிர செயற்பாட்டாளராகவும், கருத்தியல் ரீதியில் தனக்கென கோட்பாடுகளை வகுத்துக் கொண்டவராகவும் எம் மத்தியில் செயற்பட்டார். பன்முகத் திறமையும், ஆளுமையும், சிந்தனை தெளிவும் கொண்ட இவர் எமது செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தவராக இருந்தார். பெண்ணிலைவாதத்துடன் இவர் நம் நாட்டின் சமூக அரசியல் விடுதலைக்காக செயல்பட்டு பல திட்டங்களை அமுலாக்கியவர். இவரின் எழுத்துக்கள் பத்திரிகை மூலமும் சஞ்சிகை மூலமும் வந்தடைந்து எம்மை வழிநடத்தின. இவரால் தொடங்கப்பட்டு முடிக்கப்படாத பணிகள் எமது முன் இருக்கிறது. அவற்றை நாம் தொடர வேண்டும்.

# தூய்மை, துடக்கு, பெண்

பெண்கள் எவ்வளவு தான் முன்னேற்றங் கண்ட பொழுதிலும் பெண்கள் பற்றிய சமூக பார்வை என்பது இன்னமும் சாபக்கேடானதாகவே இருந்து வருகிறது. எல்லாத்துறைகளிலும் பெண்கள் இன்று கால் பதித்துள்ளனர். இன்றைய நவீன யுகத்தில் பெரும்பாலான குடும்பங்கள் பெண் தலைமைத்துவத்தின் கீழ் உள்ளது.

நாகரீக உலகை நோக்கி நாம் போய் கொண்டிருக்கும் இந்த வேளையில் மாதவிடாய்க் கட்டுப்பாடுகள் மெல்ல மறைந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு மாதவிலக்கு ஏற்பட்டிருக்கும் காலத்தில் வேலை பார்க்கும் பெண்ணை வீட்டில் இருக்க சொல்லி உலகத்தை விட்டு அவர்களை தனிமைப்படுத்த எதிர்ப்பார்ப்பது நடக்காதல்லவா? ஆனால் அவ்வாறான ஒரு சம்பவம் தொடர்பாக அண்மையில் குமுதம் சஞ்சிகையில் பிரசுரமான ஓர் கட்டுரையை இங்கு நாம் உங்களுக்கு தருகிறோம்.

காலம் கனிந்து கம்பியுட்டர் யுகமாக மாறிப் போனாலும் காலங்காலமாக மனிதர்களிடையே பண்பாடும் என்னும் பெயரில் பின்பற்றும் மூட நம்பிக்கைகள் இன்னும் மாறவில்லை. தமிழகத்திலே இன்னும் சில கிராமங்களில் மாத விலக்கு காலத்தில் பெண்களுக்கு தங்குவதற்கு என விடுதி போன்ற அமைக்கப்பட்டு இருக்கின்றது என்ற செய்தி வியப்பாக உள்ளது.

பருவ பெண் முதல் வயதானவர்கள் வரை தங்களுடைய மாதவிடாய் பருவங்களை இந்த மாதவிலக்கு விடுதியில்தான் கழிக்க வேண்டும். அவர்களை வீட்டினுள் தங்க அனுமதிப்பதில்லை. ஊரை ஒட்டிய பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ''முட்டுக் குடிசல்'' என்று அழைக்கப்படும் மாதவிலக்கு விடுதிக்கு வந்துவிட வேண்டும் அவர்கள் அங்கு கழிக்கும் காலங்களில் அவர்களுக்கான உணவு, படுக்கை, அரட்டை, விளையாட்டு என தனது பொழுதுகளை அங்கேதான் கழித்தாக வேண்டும் அந்த காலங்களில் அவர்களை ஊருக்குள் அனுமதிப்பதில்லை அதேபோல் ஊருக்குள் உள்ள மற்ற ஆண்களோ பெண்களோ அந்த எல்லைப்பகுதிக்குள் செல்லவும் கூடாது.

கடுமையான பாதுகாப்போடும், கட்டுப்பாட்டுடனுமே இந்த மாத விலக்கு விடுதியானது அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் தேனீ, போடி, ஆண்டிப்பட்டி பகுதிகளில் வாழும் ராஜகம்பளத்து நாயக்கர்கள் வாழும் பகுதிகளில் இன்னும் இந்த விடுதியின் வாசம் வீசுகின்றது. அதுவும் காலத்தின் மாற்றங்களை உள்வாங்கிய நவீன மயமாக்கப் பட்டுள்ளது அந்த விடுதி.

கொடுவிலார் பட்டி என்னும் கிராமத்தில், கையில் பாடப் புத்தகத்தோடு மாதவிலக்கு விடுதியில் படித்து கொண்டிருந்த வினிதா என்னும் மாணவியை தாயின் அனுமதியுடன் குமுதம் குழுவினர் பேட்டி கண்டபோது:

> ''நாங்கள் இதை கவலைக்கிடமான ஒரு விடயமாக நினைப்பதில்லை, தொன்று தொட்டு முன்னோர்களான பெரியோர்கள், ஏற்படுத்திய கட்டுப்பாட்டோடு கலாசாரத்தோடு ஒன்றி இன்றும் நாங்கள் கடைப்பிடித்து வருகின்றோம். இந்த மாதவிலக்குக் காலங்களில் இந்த மாதிரியான ஓய்வு எங்களுக்கு ஆரோக்கியமாக இருக்கிறது. மூன்று நேரமும் உணவும், நீரும் எமக்கு எங்கள் வீட்டில் இருந்து கொண்டு வந்து கொடுக்கின்றார்கள். வீட்டில் அம்மா, பாட்டி, அக்கா என்று யாராவது வந்து எல்லைக் கோட்டிற்கு வெளியே இருந்து சாப்பாடு கொடுத்திட்டு போவார்கள். இங்கேயே அடிப்படை வசதிகள் அமைந்திருப்பதனால் எந்த விதமான பிரச்சினைகளுக்கும் நாங்கள் முகம் கொடுக்க தேவையில்லை.''

இந்த இடமானது பாதுகாப்பானதாக இருக்கின்ற அதேவேளை தாயம், பல்லாங்குழி என விளையாடி பொழுதுகளை போக்குவோம். எல்லோரும் மாதவிடாய் காலங்களை இங்கே கழிக்க வேண்டும். பாடசாலைக்கு செல்லும் மாணவிகள் தங்கள் வீட்டுப் பாடவேலைகளாக இருந்தாலும், படிப்பதாக இருந்தாலும் சரி இங்கிருந்து தான் ஏழு நாளும் செல்வோம்'' என்கிறார் மாணவி வினிதா.

ஆண்டிப்பட்டிக்கு அருகே வேலாயுதம் என்னும் கிராமத்தில் அமைந்துள்ள மாதவிலக்கு விடுதிகளுக்கு வெளியே ஏகப்பட்ட மண்பானைக் கலயங்கள் காணப்படுகின்றன. அக்கிராமத்தில் உள்ள மக்கள் உணவினை உட்கொள்வது மாத்திரம் இன்றி நீரினை பருக கூட மட்பாத்திரங்களையே பயன்படுத்து கின்றனர். முதல் முதலாக பருவமடைந்த பெண்கூட இங்கு தான் தன் 11 நாள் ''வனவாசத்தினை'' முடிக்க வேண்டும். பின்னர் அடுத்த அடுத்த மாதங்களின் வனவாச புகு வதற்கான நாட்களின் எண்ணிக்கை குறைவடையும்.

''இது போன்ற பழமையான விடயங்களை வெறுப்பதா? நாகரீக காலத்துச் சங்கடமாக நினைப்பதோ இல்லை. அது மட்டுமின்றி எந்த ஊரிலும் யாரையும் எந்தப் பெண்களையும் ஊர்கண்டிப்பாக கட்டுப் படுத்துவதும் இல்லை, கட்டாயப்படுத்துவதும் இல்லை. இதனால் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைக்கு செல்வது போன்ற எந்த விதமான பாதிப்பும் இருப் பதில்லை என்பதால் இன்றும் நவீன மாற்றங்களோடு, எங்களது முட்டுக் குடிசல் எனப்படும் இது போன்ற மாத விலக்கு விடுதி பல்வேறு கிராமங்களில் சிறப்பாக செயல் பட்டுக் கொண்டுதான் வருகிறது.'' என்று குமுதம் பத்திரிக்கையாளர்களுக்கு கூறினார் பள்ளி ஆசிரியை கவிதா.

நவீனங்கள் உள்வாங்கப்பட்டு நாகரீகம் வளர்ந்து விட்ட காலத்தில் பழமையின் சின்னமாக இந்த பெண்கள் அந்த 7 நாள் ஓய்விற்காக மாத விலக்குவிடுதிக்கு செல்வது மூட நம்பிக்கையா? அல்லது ஊர்க்கட்டுப்பட்டா?

பெண்ணில் ஏற்படுகின்ற சில தவிர்க்க முடியாத உடற் தொழில் மாற்றங்களினால் அவள் கடமையில் பின்தங்கும்போது அதனைப் பலவீனமாகப் பார்க்கும் நிலைதான் அன்று இருந்துள்ளது. இன்று இதனைப் பலமாகப்பார்க்கும் காலம் தொடங்கிவிட்டது. இதற்குப் பெண்கள் அனைவரும் தம்மிடம் உள்ள பிற்போக்குச் சிந்தனைகளைக் களைந்து தம் ஆற்றல் திறனையும் முற்போக்குச் சிந்தனையையும் வளர்க்க வேண்டும். அத்துடன் அறிவியல்ரீதியாகவும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இவ்வாறு செயற்படும் போது பெண்கள் ஆண்களிற்குச் சரிசமனான பலமுள்ளவர்களாகத் திகழ்வார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

ஆதாரம்: குமுதம்

06-10-2014

# பெண்ணின் கவர்ச்சியை காட்சிப் பொருளாக்கும் ஊடகம்

எப்போதெல்லாம் சமூதாயத்தில் சீர்கேடுகள் நிலைகொள்கின்றனவோ அப்போதெல்லாம் மக்கள் முதலில் பழிப்பது சினிமாவைத்தான் குறிப்பாக பெண்களுக்கு எதிராக வன்முறைகள் நிகழும் போது திரைப்பட கலாச்சாரத்தை மையப்படுத்த தாக்க தயங்குவதில்லை. அந்த நிலையை சினிமாவே உருவாகிவிட்டது. காரணம் பெண்களை அவர்கள் சித்தரிக்கும் விதம்.

சினிமாவானது மக்களிக்கு களிப்புட்டும் ஒரு ஜனரஞ்சமான ஊடகம் என்பதை விட மக்கள் மத்தியில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஊடகமாகவும் திகழ்கின்றது. சமூக மாற்றங்களில் தாக்கம் செலுத்தும் ஒரு ஊடகமாக கருத முடியும்.

இந்திய சினிமாக்களை பொறுத்தமட்டில் கதாநாயகி பாத்திரத்தையோ அல்லது பெண் பாத்திரத்தையோ சித்தரித்து காட்டும் போது ஒரு கவர்ச்சிப் பொருளாகவும், பாலியல் பிம்பங்களாக காட்டத்தவறுவதில்லை. அதில் ''அய்டம் சாங்'' என்னும் பெயரில் செய்யும் அட்டகாசம் இருக்கே அதை சொல்லிமாளாது.

அதுமட்டுமா பத்திரிகைகள் தங்கள் பத்திரிக்கையை வியாபாரம் பண்ணுவதற்கு அரைகுறை ஆடை அணிந்த பெண்களை கவர்ச்சி காட்டும் பெண்களை முகப்பு அட்டைப்படங்களாக வெளியிடுகின்றன.அவை விற்பனை ரீதியாக சாதனைபடைக்கின்றன. பெண்களை தரக்குறைவாக வர்ணிக்கும் பாடல்களும், பெண்களை இழிவாக பேசும் நகைச்சுவையான ''டயலோக்'' என்பனவும் வர்த்தக ரீதியாக வெற்றி பெறுகின்றன.

ஏன் இந்திய சினிமாக்கள் வலுவான பாத்திரமாக பெண் பாத்திரத்தை படைப்பதில் தயக்கம் காட்டுகின்றன. இதற்கு பிரதான காரணம் பாலியல் ரீதியான பாகுபாடே என ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

''ராக்பெல்லர்'' அமைப்பின் நிதி உதவிபெறும் ''ஜீனா டேவிஸ்'' இன்ஸ்டிடியுட், ஊடகங்களுக்கும் பாலின ரீதியான அணுகு முறைக்கும் இடையிலான உறவு குறித்து ஆய்வு நடத்தி உள்ளது. வெறும் உடல் அழகின் அடிப்படையிலேயே பெண்கள் சினிமாவில் மதிக்கப்படுகிறார்கள். என்பதையும், கதாபாத்திரமாகக் கூட அவர்கள் விஞ்ஞானிகளாகவோ பொறியியளாளர் வேடமோ ஏற்பதில்லை என்பதும் அவதானிக்கப் பட்டுள்ளது.

இந்திய திரைப்படத்துறையை பொறுத்தமட்டில் சினிமா நடிகைகளாக வலம் வரும் பெண்களின் தொகையை விட இயக்குனர் என்னும் நிலையை எட்டும் நபர்கள் மிகவும் குறைந்தளவிலே உள்ளனர்.

இவர்களில் பெண் இயக்குனர்களின் சதவீதமானது 9 ஆக காணப்படுகின்ற நிலையில் பெண் தயாரிப் பாளர்கள் 15 சதவீதமும் திரைக்கதையில் பணிபுரிபவர்கள் 12 சதவீதமுமாக இருக்கின்றார்கள் இது உலக சினிமாத்துறை பணிபுரியும் பெண்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த சதவீதமாகும்.

வெகுஜன ஊடகமான சினிமாவை வெறும் பொழுது போக்காகவோ? லாபம் பெறும் வர்த்தக நோக்கிலே பார்க்கின்றானர்களே ஒழிய எந்த மாதிரியான கதைக் கருவினை கொண்ட திரைப்படத்தினை எடுத்தால் பெருமளவில் இலாபம் காணலாம் என எண்ணுகின் றார்களே ஒழிய அது எவ்வளவு தூரம் மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை சிந்திப்பவர்கள் தற்போது சினிமாத்துறையில் அருகிவருகின்றனர்.

பெண்ணின் மதிப்பு விளம்பர அட்டையில் அரைகுறை ஆடையில் பெட்டிக்கடையில் விலை போகின்றது. தாயை தெய்வமாகவும் பெண் கடவுளரை தனது குல தெய்வமாகவும் வழிபடும் நாட்டில், இன்னொரு பெண் அரை நிர்வாணமாக நிற்பதை படம் பிடித்து முகப்பு அட்டையில் நிறுத்தும் பெருமை இந்திய நாட்டையே சாரும்.

அவ்வாறு விற்கும் பத்திரிக்கைகளை வாங்கிப் படிக்கும் மக்களின் மூளை மழுங்கிவிட்டதா? அல்லது அதை அட்டைப்படமாக வெளியிடும் பத்திரிக்கையாளர் களுக்கு மூளை மழுங்கிவிட்டதா? கேட்டால் சொல்வார்கள் பத்திரிகைக்கு உள்ளே உள்ளதை யாரு பாக்கிறாங்க பத்திரிகை பார்க்க கவர்ச்சியாக இருக்கா அதைத்தான் வாங்கிறாங்க ட்ரென்ட்டுக்கு ஏற்றமாதிரி மாறவேண்டாமா? பெண்கள் அரை நிர்வாணமாக நிற்பதை வெளியிடுவது ட்ரென்ட்டாமா?

சினிமாவில் கதாபாத்திரம் தாங்கி நடிக்கும் பெண்களுக்கும் தனிப்பட்ட வாழ்வு, தனிப்பட்ட குணாதி சயங்கள் இருக்கும் என நம்மில் எத்தனை பேர் நினைக் கின்றோம். அவர்களையும் நாங்கள் சினிமாவில் பார்த்து ரசித்த ஒரு சித்திரமாகவே சிந்திக்க முனைகின்றோம். ஒரு பெண் நடிகை அரை குறை ஆடை அணிந்து நடிக்க தயக்கம் காட்டவில்லை எனில் அதே போன்றுதான் சுயவாழ்விலும் அவர் இருப்பார் என்று நினைக்கும் பலரை நம்மில் காணலாம்.

பெண்களை, ஏட்டை தொடாதே! அடுப்படியில் முடங்கு! வீட்டை விட்டு வெளியேறாதே! கணவன் இறந்தால் நீயும் உடன்கட்டை ஏறு! அல்லது கைமை கோலம் பூணு! என்று முடக்கி அடிமையாக்கிய உலகம் இன்று சந்தையில் பெண்களை சரக்கு பொருளாகவும் விற்பனை பொருளாகவும் விட்டு அவளுக்குள்ளும் அந்த எண்ணக்கருவை உருவாக்கி முடக்கி அடிமையாக்கி வைத்திருக்கின்றது. அதற்கு சினிமாவினதும் ஊடகங்களினதும் பங்களிப்பு அளப்பரியது.

பொறுப்பு வாய்ந்த ஊடகமான சினிமாவும் வெகுஜன ஊடகங்களும் ஏன் பெண்களை கவர்ச்சி பொருளாகவும் அழகு பொம்மைகளாகவும் வர்ணிக் கின்றன. தேவதை என்றும் பேயென்றும் சித்தரிப்பது ஏன் ? ஏன் பெண்களை சக்தி வாய்ந்த கதாபாத்திரமாக சித்தரிக்ககூடாது ?

அன்று ஆண், பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்று புராணங்கள் சித்திரித்து விட்டுச்சென்ற பணியையே இன்று சினிமாவும், வெகுஜன ஊடகமும் தொட்டு செல்கின்றன. ஏன் மாற்றக்கூடாது ?

# நாடக அரங்கியலில் தத்துப்பிள்ளை சோமலதா சுபசிங்ஹ

சோமலதா சுபசிங்ஹ மற்றும் அவரது படைப்புக்களை இலங்கை நாடக அரங்கியல் வரலாற்றில் ஒரு மைல்கல் என வர்ணிக்கலாம். நடிகை, இயக்குநர், நாடக விரிவுரையாளர் என பல்வேறு பரிமாணங்களை கொண்ட சோமலதா சுபசிங்க 1939ம் ஆண்டு இலங்கையில் பிறந்தார்.

இவரது படைப்புக்கள் பெரியோர் மத்தியில் மட்டுமின்றி கல்வி கற்கும் மாணவர், இளைஞர், யுவதிகள் என பல்வேறு நபர்களையும் மையப்படுத்தி காணப்பட்டது. இவரது படைப்புக்களில் பெரிதும் பாராட்டப்பட்டது சிறுவர்களுக்கான படைப்புக்களே. இரக்கம், கருணை, பரிவு ஆகிய குணங்களை இயற்கையில் கொண்ட இவர் குழந்தைகளுடன் இலகுவாக பழகி அவர்களின் இயல்பான நடத்தைகளை தம் படைப்பில் உள்வாங்கிக்கொள்பவர்.

குறிப்பாக ''சிறிபோ அய்யா'', ''மடோல் துவ'', ''விரகய'', ''திலக சாஹா திலக'' மற்றும் ''எல்ல லங்க வலவ்வ'', ''கம்பெரலிய'', ''சுப அநாகதயக்'' போன்ற தொலைக்காட்சி நாடகங்களில் அதை அவதானிக்கலாம். அத்துடன் அவை சர்வதேச ரீதியான அங்கீகாரம் பெற்ற படைப்புகளாகவும் காணப்படுகின்றன.



இவர் தனது வாழ்நாளில் குணசேன கலப்பத்தி, ரஞ்சித் தர்மகீர்த்தி, நிமல் வீரமுனி, ஹென்றி ஜயசேன போன்ற நாடக நடிகர்கள் போன்றவர்களுடன் பணிபுரிந்தவர் என்பதோடு இவர் ஒரு சிறந்த நாடக பயிற்றுவிப்பாளர். இவரது திறமையை கௌரவிக்கும் முகமாக கலாசூரிய என்னும் நிறுவனம் கலாகீர்த்தி பட்டம் வழங்கி கௌரவித்தது.

தேசிய ரீதியில் புகழ்பெற்ற படைப்புக்களாக ''தொப்பி வெலந்தா'', ''புஞ்சி அபட தென் தேரி'' போன்ற படைப்புக்களை குறிப்பிட்டுக்காட்டலாம்.

1962ம் ஆண்டு பட்டதாரி ஆசிரியராக பணியாற்றினார். இவர் கல்வி அமைச்சுடன் இணைந்து 13 ஆண்டுகள் ஆரம்ப இடைநிலை பள்ளி பாட விதானத்தில் நாடக அரங்கியல் துறை மற்றும் சினிமாத்துறையின் தொடக்க நிலை அறிமுகத்தை வடிவமைத்தார். அத்துடன் கல்வி அமைச்சுடன் இணைந்து பள்ளி மாணவர்களை நாடக அரங்கியலில் ஈடுபடவும் வைத்தார்.

நாடகஅரங்கியல் கலை கண்டெடுத்த தன் தத்துப் பிள்ளையாக விளங்கிய இவர், தன் கலைத்தாய்க்கு செய்ய வேண்டிய கடமையை செவ்வனவே செய்தார். இவர் தனது 79ஆவது வயதில் இவ்வுலகை விட்டுமறைந்தார்.

# ஓவியங்கள்தான் என் ஆயுதம்





''இந்த சமூகம், பெண்களுக்குத் தரும் வலியையும், வேதனையையும் பதிவுசெய்ய, இந்த சாதாரண பெண்ணுக்குக் கிடைத்த ஆயுதம். வர்ணங்களும், தூரிகையும்தான். மனதின் உணர்ச்சிகளை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத என்னை, இந்த சமூதாயத்தோடு இணைக்கும் மௌனமொழியும் இந்த ஓவியங்கள் தான்!'' தன் விரல்களில் பிறந்த ஓவியங்களைத் தடவியவாறே பேசுகின்றார் சுவர்ணலதா.



இயற்கை எழில் கொஞ்சும் ஆறுகள், மலைகள், பறவைகள் இவற்றோடு அழகுப் பதுமைகளாக பெண்களின் மீதான பாலியல் வன்முறைகள், அமிலவீச்சு, உள்ளத்தின் ஆழத்தில் அவர்கள் உணரும் வலி, உள்ளுக்குள்ளேயே புதைக்கப்பட்ட ஆசைகள் என சுவர்ணலதாவின் ஓவியங்கள் விரிகின்றன. ஒரு பெண்ணால் ஆணிடம் சொல்லமுடியாத எந்த வார்த்தைகளையும் பேசிவிடக் கூடியவை. இவரது ஓவியங்கள் பார்வையாளர்கள் மனதிலும் பெண் கொடுமைக்கு எதிராகப் போராடும் விதையை விதைப்பவை.



குடும்பத்தலைவியாகவும், தாயாகவும் இருந்து தனக்கான குடும்ப சுமைகளோடு, பெண்களின் வலிகளையும் சுமந்து வரைந்த தூரிகைக்குச் சொந்தக்காரரான சுவர்ணலதாவிடம் பேசினோம்.

''பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை என் ஓவியங்கள் மூலமா இந்த சமூகத்துக்கு அழுத்திச் சொல்லி, ஒவ்வொரு பெண்ணும் தனக்கான பாதுகாப்பு, மரியாதையுடன் நடத்தப்படணும் வலியுறுத்துவதற்காகவே இந்த அக்டோபரில் ''நிர்பயா'' என்ற தலைப்பில் ஒரு கண்காட்சி நடத்தினேன்.

''தமிழ்நாட்டுல இருந்து சிங்கப்பூருக்குப்போய் செட்டிலான குடும்பம் என்னோடது. என் தாத்தாவுக்கு பெயின்ட்டிங்ஸ் வாங்குறதுனா ரொம்ப ஆர்வம். அது தான் எனக்குள்ள வரையறதுக்கான ஆர்வத்தை அதிகமாக்குச்சு எம்.ஏ., ஜர்னலிசம் முடிச்ச கையோட கல்யாணம் பண்ணிக்கிட்டு சென்னைக்கு வந்தேன். ரொம்ப நாளா எனக்குக் குழந்தை இல்லை. ஒவ்வொரு விசயத்தையும் பார்த்துப் பார்த்து செஞ்ச அப்பா, அம்மா, தம்பினு மொத்தக் குடும்பத்தையும் கல்யாணத்துக்கு முன்னயே விபத்துல பறிகொடுத்துட்டவ நான். ஆறுதல் சொல்லக் கூட யாருமே இல்லாத எனக்கு, கணவரோட சேர்த்து ஆறுதலா இருந்தது நான் வரைந்த இந்த ஓவியங்கள்தான்'' என்றவருக்கு தற்போது ஒரு மகன் இருக்கிறான்.

''மொத்த இந்தியாவையும் தலைகுனிய வெச்ச, டெல்லி மாணவி நிர்பயாவுக்கு நேர்ந்த கொடுமைதான், பெண்களுக்கு நடக்கும் இந்த அநீதிகளுக்கு எதிரா ஏதாவது செய்யணுங்கிற சிந்தனை எனக்குள்ள தலைதூக்க காரணமா இருந்துச்சு. இந்தக் கொடுமைக்கு எதிராகுரல் கொடுக்கறதுக்காக டெல்லியில இரவெல்லாம் கொட்டுற பனியில போராடிய அந்தப்பொண்ணுங்க மனதில் எவ்வளோ வலி இருந்ததுங்கிறத நேர்ல பார்த்தேன். அந்தக் காயத்தோட தழும்பு மனசைவிட்டு ஆறுறதுக்கு முன்னயே வினோதினி, வித்யா மீதான ஆசிட் வீச்சுதாக்குதல்கள். மிருகமாகிப்போன மனிதர்கள் மீதான என் ஆதங்கத்தை எப்படி வெளிப்படுத்தறதுனு தெரியல. அப்போதான் கணவர் சந்திரசேகர், ''உனக்கு நல்லா வரையவரும். ஆயிரம் வார்த்தைகளைக் கூட ஒரேயொரு ஓவியத்தால சொல்லிட முடியும். உன் மனசை உன்னோட ஓவியங்கள் மூலமா வெளிப்படுத்து! சொல்லி, ''ரவிவர்மா கேலரி''யை ஆரம்பிச்சு கொடுத்தார்'', என்றவர் கையில் எடுத்த ஆயுதம் ''போஸ்ட் மார்டனிசம்'' ஓவியக்கலை.

மரணத்துக்குப்பின் மருத்துவர்கள் ஒவ்வொரு உறுப்பையும் தனித்தனியாக எடுத்து ஆராய்ச்சி செய்வது போல், ஒவ்வொரு உறுப்பையும் தனித்தனியாக வரைவதுதான் இந்த ''போஸ்ட்மார்டனிசம்'' கலையின் சிறப்பம்சம். இதன் மூலமாக ஒருபெண்ணின் தலை முதல் கால்வரை அவள் படும் துயரங்களை சிறிதும் ஆபாசம் இல்லாமல் கலைநயத்துடன் சுவர்ணலதா வரைந்திருக்கும் ஓவியங்கள் ஒவ்வொன்றும் கல்மனதையும் கரைப்பவை.

பெண்களுக்கு நடக்கும் கொடுமைகளை மையமாக வைத்து இதுவரை மூன்று ஓவியக் கண்காட்சிகளை நடத்தியுள்ள சுவர்ணலதா, இந்திய மகளிர் வட்டத்தின் சார்பாக ''மிகச் சிறந்த சாதனைப்பெண்'' விருது பெற்றிருப்பதுடன், தன் ''ரவிவர்மா கேலரி''யின் மூலம் ஆதரவற்ற பெண்களுக்கான கல்வி மற்றும் திருமணச் செலவுகளுக்கும் உதவிவருகிறார்

''இந்த ஓவியங்களைப் பார்க்கும் ஆண்களில் ஒருவர் பெண்களுக்காக சிந்தும் ஒரு சொட்டு கண்ணீர் கூட ஒட்டுமொத்த பெண்களுக்கான வெற்றிதான்!''எனும் சுவர்ணலதாவின் கண்களில் அதேவேகம்!..

நன்றி

-விகடன் -

(2-12-2014)

## ஐ.நா சபையின் அறிக்கையும் பெண்களின் கவர்ச்சியும்

உலகம் முழுக்க சினிமாக்களில் பெண்களை எப்படிச் சித்திரிக்கின்றார்கள் என, கடந்த நான்கு வருடங்களாக ஆராய்ந்திருக்கிறார்கள். அதில் ''இந்திய சினிமாக்களில் பெண்களை மிகவும் கவர்ச்சியாகச் சித்திரிக்கிறார்கள். கிட்டத்தட்ட 95 சதவீகித சினிமாக்களில் கிளாமர் காட்டுவதற்கு என்றே ஹீரோயின்களை நடிக்க வைக்கின்றார்கள். படத்தின் கதையில் அவர்களுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை'' என்கிறது அந்த அறிக்கை. இந்தி சினிமாக்களில் வித்யா பாலன், பிரியங்கா சோப்ரா போன்றோர் ஹீரோயினுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வேடங்களில் நடித்தாலும், அவர்களின் ''கவர்ச்சி இழப்பை'' அறிமுக ஹீரோயின்கள் மூலம் சமாளிக்கிறார்கள் என்கிறது அறிக்கை.

# கருத்தடை ஏன் சட்டமாகக் கூடாது?

''இந்த மாதம் பெப்ரவரி அளவில் பன்னிரண்டு வயது நிரம்பிய சிறுமி ஒருவரை அழைத்துவந்தார். அவர் என்னுடைய நண்பர்தான். பொலிஸ் கான்ஸ்டபிளாக கடமையாற்றுகின்றார். குறித்த சிறுமி தன் மைத்துனனால் பாலியல் வன்புணர்வுக்குட்பட்டுள்ளாள் என பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின்படி குறித்த பெண் அவ்வாறு வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டாளா? என்பதை பரிசோதிக்கவே அழைத்து வரப்பட்டாள். குறித்த பெண்ணும் அவ்வாறே வாக்குமூலமும் அளித்திருந்தாள். மருத்துவ பரிசோதனையின் போது குறித்த சிறுமி கருத்தரித்திருக்கின்றாள் என்பது ஊர்ஜிதமாக்கப்பட்டது. அவள் கருத்தருந்திருந்தாலும் அதை தாங்கி பெறக்கூடிய மனவளர்ச்சி அவளிடம் இல்லை என்பதை உணர்ந்தேன். ஆனாலும் குறித்த பெண்ணின் நிலை கருதி அவளுக்கு சட்டப்படி கருக்கலைப்பு செய்வதானது சாத்தியமாகாத விடயம். அதற்கு நிறைய சட்ட விதிமுறைகளை பின்பற்றியாக வேண்டி உள்ளது. குறித்த பெண் சட்டப்படி முறைகளை பின்பற்றி கருக்கலைப்பு செய்வதற்குள் குறித்த சிறுமியின் பிள்ளை பிரசவிக்கப்பட்டுவிடும். ஏன் இவ்வாறான சந்தர்ப்பத்தில் கருக்கலைப்புச் சட்டத்தை தளர்த்தினால் என்ன?'' என்கின்றார் டாக்டர் மகேசன். (Sunday Times may 31st)

எமது நாட்டை பொறுத்தமட்டில் கருக்கலைப்பு இரண்டு காரணங்கள் தவிர வேறு எந்த ஒரு சந்தரப் பத்திலும் வன்புணர்விற்குட்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் கூட அந்த சட்டத்தை தளர்த்த அனுமதியில்லை. இவ்விரண்டு சந்தர்ப்பமாக கருதப்படுவது

1. தாயின் உயிருக்கு ஆபாத்தான சந்தர்ப்பம்.
2. குணப்படுத்தப்பட முடியாத குறைப்பாட்டுடன் குழந்தை பிரசவிக்கப்படும் என ஐயப்படும் சந்தர்ப்பத்தில் பெற்றோரின் அனுமதியுடன்.

வன்புணர்வு, கருத்தடை உத்தி தவறும்பட்சத்தில் (லுப்) கர்ப்பம் தரித்தல் என்ற இரண்டு சந்தர்ப்பத்திலும் பல பெண்கள் கருத்தரிக்கப்படுகின்றனர். குறிப்பாக வன்புணர்விற்கு உட்பட்டு கருத்தரிக்கப்படும் சந்தர்ப் பங்களில் நிராதரவாக்கப்படுகின்றார்கள். இவ்வாறான தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் கூட அவள் விரும்பியோ விரும்பாமலோ அந்த கர்ப்பத்தைத் தாங்கி பிரசவிக்க வேண்டி உள்ளது. அல்லது சட்ட விரோதமாக கருக்கலைப்பை நாடவேண்டி உள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் உயிரிழக்கும் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

வருடமொன்றிற்கு 35 இலட்சத்திற்கும் அதிகமான கருக்கலைப்புகள் நடை பெறுகின்றன. அதில் சட்ட விரோதமான முறையில் செய்யபடுபவை அரைவாசி பங்கினைவிட அதிகமானது.

ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கருத்தரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அந்தப் பெண் வேண்டியோ வேண்டா மலோ அந்த குழந்தையை பெற வேண்டிய கட்டாயத் திற்கு சட்டம் அவளை நிர்ப்பந்திக்கிறது, அது அவளுக்கு பெரும் மனஅழுத்தத்துடன் சிசுவின் மீது வெறுப்பினையும் ஏற்படுத்தி விடுகின்றது. வேண்டாவெறுப்பிற்கு பிள்ளையை பெற்று அதற்கு ''காண்டா மிருகம்'' என்று பெயர் வைத்தாற் போல் ஆகிவிடும்.

அப்பெண்ணால் அந்தக் குழந்தையை பார்க்கும் ஒவ்வொரு கணமும் அவளது அன்பிற்கு பதிலாக வன்மமே வளரும். அவள் வன்புணர்விற்குட்படுத்தப்பட்ட சம்பவம் அவள் முன் எழுந்து நிற்குமேயானால் அவளால் எவ்வாறு இயல்பாக அந்தபிள்ளை மீது அன்பு காட்ட முடியும்? வெறுப்பை உமிழ்வதற்கான சாத்தியமே அதிகம், அன்பை பெற முடியாத குழந்தை வளர்ந்து எதிர்காலத்தில் சமூகத்தில் மூர்க்கக் குணத்தை காட்ட முற்படும். அவளால் பண்பட்ட ஒரு சமூதாயத்தை உருவாக்க கூடிய ஒரு வாய்ப்பு இழக்கப்படுகிறது. அதேநேரம் ஒரு குடும்பத்திற்கான அலகு சிதைக்கப்படும். எதிர்காலத்தில் தன் வயிற்று பிழைப்பிற்காக அவள் பாலியல் தொழிலையே நாடவேண்டிய அதே நேரம் சமூகத்தில் தந்தையின் பெயர் தெரியாத குழந்தைகள் உருவாகுவதற்கான அடித்தளத்தினை இச்சட்டம் உருவாக்கி விட்டுவிடும்.

கருக்கலைப்பு செய்வது பாவம் என்றால் கோழியின் முட்டையை உண்பதும் பாவம் தானே! பசுவின் பாலை குடிப்பதும் பாவம் தானே! ஏன்? அதை சட்டம் தடுக் கவில்லை! தண்டிக்கவில்லை! மனிதன் தான் வாழ்வதற்கு இயைபாக சட்டத்தை வகுக்க அவனால் முடியும்

என்றால் ஏன் அவனால் பாலியல் வன்புணர்வுக்குட் படுத்தபட்ட அபலைக்காக அவள் விரும்பாத கருவை கலைப்பதற்கான சட்டத்தை ஏன் தளர்த்தக் கூடாது?

மிருகங்கள் வதைக்கப்பட்டால் கூட அதை ஏன்? என்று கேட்பதற்கு சட்டங்கள் உண்டு. அதை பாதுகாப்பதற்கு அமைப்புக்கள் உண்டு. ஒரு பெண் வதைக்கப்பட்டால்! சிதைக்கப்பட்டால்! அதை வசைபாடவே சமூகம் உண்டு! என்றே கூறவேண்டும். அவளே துணிந்து முன்வந்து சொல்ல வந்தாலும் சமூகம் அவளை நடத்தை கொட்டவள் என்ற பார்வையில் பார்க்கும். நீதி கேட்டு நீதிமன்றம் சென்றாலும், விசாரணை என்னும் பெயரில் அவள் குதறப்படுவாள். இதை சொல்வதை விட சொல்லாமல் இருப்பதே மேல்! என எண்ணும் அளவிற்கு அவர்கள் விசாரணை அமையும். அதை விடவும் ஊடகங்கள் அவளை விற்று பிரபலமாகும். கல்லெறிபடாமல் அவள் மனம் காயப்படும்.

அண்மையில் புங்குடுதீவில் ஒரு பாடசாலை மாணவி கூட்டு வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டு உயிரிழந்தாள். இது தொடர்பில் பல மறியல் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என பல சம்பவங்கள் அரங்கேறின. நீதிமன்றத்தில் விசாரணை என்னும் பெயரில் அந்த மாணவியின் தாயையும், தமையனையும் கேட்ட கேள்வியால் தாயால் பதிலளிக்க முடியாது மயக்கமுற்றார். தமையானால் பதிலளிக்க முடியவில்லை. நெஞ்சு வலியால் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். இதனை சுட்டிக்காட்டியதற்கான காரணம் ஒரு பெண்ணின் உறவினராலேயே அந்த விடயங்களை பேச முடியாத சந்தர்ப்பத்தில் அந்தபெண் மட்டும் தலை விதியே என தாங்கி சமூதாயத்தில் வாழவேண்டுமா? அதை மறக்க எண்ணும் அபலைக்கு கருக்கலைப்பு சட்டம் விஷமாகாது மருந்தாக கூடாதா?. சற்று தளர்த்தினால் என்ன? அதில் தவறில்லையே!

அவளுக்கு பிள்ளையாக பிறந்த காரணத்திற்காக அவளது பிள்ளையும் தூஷிக்கப்படும். ஏன்? எவனோ ஒருவன் செய்த குற்றத்திற்காக அப்பாவிகளான இவர்கள் சமூகத்தில் தண்டிக்கப்பட வேண்டும்.

இதற்கு சிங்களப்பாடல் வரி ஒன்று சிறந்த உதாரணமாக சொல்லாம்.

''என்னை வளர்த்து சீராட்டிய தாயே! என்னை பட்டம் பெறவைத்தாயே! ஆனால் என் பிறப்பு சான்றிதழில் மட்டும் தந்தையின் பெயர் வரவேண்டிய இடத்திற்கு எவ்வாறு கேடு வந்தது?'' அந்த மகனின் கேள்வி நியாயமானது. அது அவனது அடிப்படை உரிமையும் கூட, ஆனால் அந்த பெண்ணால் தான் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டேன் என்பதை தன் மகனிடம் சொல்ல முடியுமா? .எந்த தாய்தான் அதை சொல்ல விரும்புவாள் ?

பல சட்டங்கள் பல முறை பாராளுமன்றாத்தில் மீள்பரிசீனைக்கு உட்படுத்தப்படுகின்றது ஏன் இந்த சட்டத்தை தளர்த்துவதற்கான ஒரு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவரக்கூடாது''.

# பெண்ணினத்தை போற்றுவோம்

*''இன்பத்தை கருவாக்கினாள் பெண் !*
*உலகத்தை உருவாக்கினாள் பெண் !*
*உலகத்தில் மனிதரை உருவாக்கினாள் பெண்!*
*உலகத்தில் மனிதரை உருவாக்கினாள் பெண்!*
*விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் விலையற்ற*
*செல்வம் பெண் !*
*விலையற்ற செல்வம் பெண்!''*

என சினிமா பாடல் ஒன்று பெண்ணினத்தின் மாண்பினை பாடும் காலம் உதித்த போதிலும் பெண் குழந்தை என்றால் வெறுக்கும் சமூகமாக நம்மவர் திகழ்வது வருந்தத்தக்கதே!

பெண்ணை தெய்வமாக கொண்ட மண்ணான பாரத்தில், பெண் ஜென்மம் என்பது வீணானது என எண்ணும் எண்ணம் விட்டபாடில்லை. பெண் குழந்தை பிறந்தாலே அதற்கு கள்ளிப்பால் ஊட்டிக் கொல்லும் சமூகம் மாறிய பாடில்லை. ஏன் நம் சமூகம் சிந்திப்பதில்லை! பெண்களால் சாதிக்க முடியாது என்று நம் தழிழர் சரித்திரத்தை எடுத்து கொண்டேமே ஆனால் வெள்ளையனுக்கு எதிராக வேல் ஏந்தி நின்ற நம் வீரமங்கை வேலு நாச்சியாரை. அன்று கல்பனா சௌலாவின் பெற்றோர் பெண் குழந்தை என எண்ணி கள்ளிப்பால் கொடுத்திருந்தால் நம் சமூத்திற்கு இன்று

கல்பனா சௌலா போன்ற ஒரு பெண் விண்வெளி வீராங்கனை கிடைத்திருப்பாளா? கல்பனா சௌலாவை வாழ்த்தும் சமூகம் தான் தம் வீட்டில் ஒரு பெண் குழந்தை பிறந்தால் கள்ளிப்பால் ஊட்டிக் கொல்ல முனைகின்றது.

நாகரீகம் மாறினாலும், நடை, உடை, பாவனை மாறினாலும் பயன் இல்லை.நம் சமூகத்தவர் மத்தியில் உள்ள எண்ண அலைகள் மாறவிடில். மிருகங்களில் பெண் இனத்தை விரும்பும் மனித வர்க்கம் மனிதனில் மட்டும் ஆண் இனத்தை விரும்ப காரணம் என்ன ? இதற்கு பதில்

''சாண் பிள்ளை என்றாலும் அவன் ஆண்பிள்ளையடி! சேறு கண்ட இடத்தில் மிதிப்பான் தண்ணி கண்ட இடத்தில் கழுவுவான். நீ பெண் பிள்ளை உன்னை பெத்து வைத்து விட்டு நெருப்பள்ளி வயிற்றில வைத்திருக்கிற மாதிரி இருக்கெடி'' இது ஆண்டாண்டு காலமாக அம்மாவின் வாயில் வரும் டயலொக்.

ஆண் கெட்டால் பாதகம் இல்லை அவனுக்கு சீர் கேட்டு பெண் எடுக்கலாம். அதே பெண் என்றால் அவள் கெடாவிட்டாலும் சீர் கொடுத்து பெண் கொடுக்க வேண்டும். சீர் கொடுத்த பெண்ணை புகுந்த வீட்டில் சீராட்டுகின்றார்களா? பயன் இல்லை.

நம்மவர் மத்தியில் பெண் பாதுகாக்கபட வேண்டிய வளாயும் பக்குவப்படுத்தப்பட வேண்டியவளாயும் ஏதோ கொள்ளிமலை இரகசியம் போல் மறைத்து வைக்க வேண்டிய பொருளாயும், அவள் வளர்ந்த பின் மாற்றானிடம் விற்கப்படும் சரக்குப் பொருளாயும் கருதப்படுகின்றாள்.

குடும்பம் என்னும் அலகிற்குள் நுழைந்து விட்டாலே பொறுப்பு, கடமை என்பன தானாய் தோன்றும். அத்துடன் இன்பமும் நிறையவே தோன்றும் இன்பத்தை ஏற்க விரும்பும் மனிதன் ஏன் பொறுப்பை தட்டிக்கழிக்க முனைகின்றான்? பெண் என்றால் சுமை, பொறுப்பு என ஏங்குகின்றான்.

இந்த பயத்திற்கே பல தாய்மார்கள் ஆண்பிள்ளையை தவம் என்றும் பெண்பிள்ளையை சாபம் என்றும் கருதுகின்றனர். தமிழகத்திலே இன்னும் சில சிறு கிராமங்களில் சோதிடம் பார்த்து பெண் பிள்ளையா? ஆண்பிள்ளையா? அதில் பெண்பிள்ளை என்றால் கருவை கலைத்து விடுவார்களாம். ஏன் ஆணா? பெண்ணா? என்று சொல்லும் அந்த சோதிடம் அந்த குழந்தை விஞ்ஞானி! டாக்டர்! என்று சொல்லாதா? அதைப்பார்த்து கருக்கலைப்பு செய்யும் மருத்துவிச்சி எப்போ சாவா என்று சொல்லாதா?

அவ்வாறு கருக்கலைப்பிற்கு உடன்படும் பெண்கள் ஒரு கணம் ஏன் நினைக்க கூடாது அன்று என் அம்மா என்னை பெண் குழந்தை என எண்ணி தாய்ப்பாலுக்கு பதில் கள்ளிப்பால ஊட்டி கொல்ல நினைத்திருந்தால் நான் இன்று என் குழந்தையை கொல்ல உயிரோடு இருந்திருப்பேனா? அது ஆணா இருந்தால் என்ன? பெண்ணாய் இருந்தால் என்ன? அதை ஏற்கும் மன அவளிடம் ஏன் சமூகம் கொடுக்கவில்லை?.

இவ்வாறு கருக்கலைப்பு செய்து விட்டு வரும் பெண்ணை தி இந்து பத்திரிக்கையாளர் பேட்டி கண்ட போது ''மறுபடியும் பெண் குழந்தை பொறந்தால் வீட்டை விட்டே விரட்டி என் புருஷனுக்கு வேற கல்யாணம் பண்ணி வெச்சிடுவேன்னு என் மாமியார் சொன்னாங்க சோதிடர்கிட்டையும் போனோம் அவர் அடுத்ததும் பெண் குழந்தை தான் என்று சொன்னாரா அதான் கலைச்சிட்டன்'' என்றாள் அந்த பெண் ஒரு குற்ற உணர்வும் இன்றி .

இவ்வாறான காரணங்களுக்காகவோ என்னவோ இப்போது மருத்துவர்களும் என்ன குழந்தை என சொல்ல தயங்குகின்றனர்.

ஓவ்வொரு உயிரினமும் தான் ஆணாகதான் பிறக்க வேண்டும் நான் பெண்ணாகத்தான் பிறக்க வேண்டும் என நினைத்து பிறப்பதில்லை அது உடலியற் கூறின் அடிப்படையில் உருவாகிறது.

அதையே விஞ்ஞான புர்வமாக பார்போமானால் ஒவ்வொரு நிற மூர்த்தங்களிலும் இரண்டு ஜீன்ஸ் காணப்படும் அதே வேளை இலிங்க உறுப்புக்களில் மாத்திரம் ஒரு ஜீன்ஸ் உடன் படைக்கப்படுகின்றான் பொதுவாக குழந்தை ஒன்று ஆணாக பிறக்க வேண்டுமானால் (XY), பெண்ணாக பிறக்க வேண்டுமானால் (XX) நிறமூர்த்தம் அமைய வேண்டும். ஒரு பெண்ணிடம் (X) ஜீன்ஸே அவளது கருவில் காணப்படும் அப்படி இருக்க அவளிடம் (Y) அணுவை எதிர்பார்க்க முடியாது அது ஆணிடம் தான் இருக்கும். ஒரு ஆணின் நிறமூர்த்தமே தீர்மாணிக்கின்றது வரும் குழந்தை ஆணா? பெண்ணா ? என அப்படி இருக்கையில் .

சோதிடக்காரனும், மருத்துவச்சியுமா என்ன குழந்தை பிறக்கும்? அதை பிறப்பிப்பது நல்லதா? கூடாதா? என தீர்மனிப்பது? தீர்மானிக்க இவர்கள் யார்? இவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? பிறப்பு இயற்கை இறப்பு இயற்கை என ஏற்ற சமூகம் ஏன் பால் என்பதும் இயற்கை என்பதை மாற்ற முனைகின்றது. வியத்தகு விந்தையாய் இல்லை?

# இராஜம் கிருஷ்ணன் கிடைத்தற்கரிய எழுத்து ஆளுமை



பெண் எழுத்தாளர்கள் வீட்டில் இருந்த படி காதல் கதைகளும், குடும்ப கதைகளையும் எழுதிய காலத்தில் கதையை அமைப்பதற்கான களத்தினை முன்னரே தீர்மானித்து அங்கு சென்று மக்களுடன் மக்களாக பழகி அவர்களின் பாத்திரங்களை தத்துருவமாக வடித்து அதை தன் எழுத்துகளினால் உலகிற்கு வழங்கிய பெண் எழுத்தாளர்களில் ஒருவரே ராஜம் கிருஷ்ணன்.

காட்சிகளை தன் எழுத்துகளால் வடித்த இவரது எழுத்துகள் பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற தவறவில்லை. உயிருடன் இருக்கும் போதே இவரது நூல்கள் அனைத்தும் அரசுடமையாக்கப் பட்டமையானது அவரது எழுத்துக்களுக்கு கிடைத்த விருது என்றே கூற வேண்டும். இவரது நூல்கள் யாவும் 2009ம் ஆண்டு அரசுடமையாக்கப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திற்கும் இருபத்தொராம் நூற்றாண்டின் ஆரம்பத்திற்கும் முடிச்சுப் போட்ட எழுத்தாளர்களுள் இராஜம் கிருஷ்ணனிற்கும் இடம் உண்டு. 1925ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ம் திகதி தமிழகத்தில் திருச்சி மாவட்டத்தில் முசிறி என்னும் ஊரில் பிறந்தார். அக்காலத்தில் காணப்பட்ட வீட்டு சட்டதிட்டம் காரணமாக கல்வியை இடையில் விட்டு திருமணவாழ்வினுள் புகுந்தார். மின்பொறியலாளரான இவரது கணவன் துணை கொண்டு பல நூல்களை வாசித்து எழுத ஆரம்பித்தார். இவரது கைகளினால் 38 படைப்புக்களை நமக்காக வழங்கியுள்ளார்.

இவரது படைப்புக்களில் விருதுகள் வென்ற படைப்புக்களாக கருப்பு மணிகள், முள்ளும் மலரும், மலர்கள், ஊசியும் உணர்வும், வேருக்கு நீர் போன்ற படைப்புக்களை குறிப்பிடமுடியும். இவைதவிர வனதேவியின் மைந்தர்கள், சேற்றில் மனிதர்கள், பாதையில் பதித்த அடிகள், கூட்டுக் குஞ்சுகள், புதிய சிறகுகள், உத்திர காண்டம், மாறி மாறி பின்னும், உயிர் விளையும் நிலங்கள், புதியதோர் உலகம் செய்வோம், வளைக்கரம், இடிபாடுகள், அலைவாய்க் கரைகள், கூடுகள் என்பவற்றை கூறலாம்.

**இவர் பெற்ற விருதுகளாக**

1950 - நியுயோர்க் ரொஹெல்ட் ட்ரைப்யுன் சர்வதேச விருதுகள்

1953 - கலைமகள் விருது(நாவல்: பெண் குரல்)

1973 - சாகித்திய அகாதமி விருது( நாவல்: வேருக்கு நீர்)

1975 - சோவியத் லாண்ட் நேரு விருது

1991 - திரு. வி.க.விருது

போன்றவற்றை கூறலாம்.

பெண்களை இயக்கமாக செயல்பட வேண்டும் என குரல் கொடுத்த இவர். பெண் என்பவள் ஒரு மனுஷி என்பதையே வலியுறுத்தினார்.

முதுமைக்காலதில் வறுமையில் வாடிய இவர் சென்னை போரூரில் உள்ள விஸ்ராந்தி ஆதரவற்றோர் இல்லத்தில் வாழ்ந்தார். உடல்நலக் குறைவின் காரணமாக சென்னை போரூரில் உள்ள தனியார் மருத்துவமனையில்

20 அக்டோபர் 2014 ல் திங்கட்கிழமை இரவு காலமானர். இறந்த பின்னரும் தனது உடலை சிகிச்சை அளித்த ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ மனைக்கே தானமாக அளித்து மாபெரும் பெண்மணி.

பெண் என்பவள் மனுசி என்பதை ஒத்துக்கொண்டு அனைவரும் உடன்படும் படி நடக்க வேண்டும் என்று நினைத்த இவர் ''எழுத்தென்பது மனித உரிமைகளின் தேடுதலே'' என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

இவரது நாவல்களின் சிறப்பு யாதெனில் ஒரு கதையின் கருக்களத்திற்கே சென்று ஆராய்ந்து எழுதிய எழுத்துக்களாக இருப்பது. அதை அவரது கதைகளின் ஊடே கண்டு கொள்ள முடியும்.

# எமது நிறுவன செயற்பாடுகள்

## வடக்கு பயனாளிக்கான நன்கொடை

சாவகச்சேரி பெண்கள் அபிவிருத்தி அதிகாரியின் ஊடாக உதவி கோரிய வெள்ளமுள்ளிவாய்க்காலை சேர்ந்த தெய்வமலர் மகேந்தரனுக்கு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் ஊடாக 73,000 ரூபா தனிப்பட்ட ஆதரவாளரின் உதவியுடன் திரட்டப்பட்ட நிதியில் இருந்து மார்ச் 2015 வழங்கப்பட்டது. யுத்தத்தில் கணவரை இழந்த 45 வயதுடைய தெய்வமலர் மகேந்திரன் ஆறு பிள்ளைகளின் தாயாவார். இவர் வசிக்கும் வீட்டிற்கான கதவுகளும் ஜன்னல்களும் போடுவதற்காக இந்த நிதியுதவி வெள்ளம் பொக்கடி மகளிர் விவகார நிறுவனம், சாவகச்சேரி பெண்கள் அபிவிருத்தி அதிகாரியின் ஊடாக வழங்கப்பட்டது.

## மகளிரியல் கற்கை நெறி

நான்கு மாதகாலம் ஆங்கில மொழிமூலம் இக் கற்கைநெறி எம்மால் நடத்தப்பட்டது. அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பொது சமூகத்தினர் உட்பட 20 பேர் இந்த கற்கை நெறியில் கலந்து கொண்டனர். பண்பாட்டின் அடிப் படையில் கட்டமைக்கப்பட்ட பாலியல், பெண்ணிலைவாத கோட்பாடுகள், இலங்கையில் பெண்களுக்கு சாதகமான சட்டங்கள் அவற்றின் போதாமை, ஜனநாயக பண்பாட்டில் பெண்களின் பங்களிப்பு, அவர்களின் உரிமைகள் போன்ற 11 விடயங்கள் இக் கற்கை நெறி உள்ளடக்கியது. பல்கலைக்கழகங்களின் சிறந்த விரிவுரையாளர்களின் ஊடாக விரிவுரைகள் நடத்தப்பட்டன. பங்குபற்றியவர் களுக்கு கற்கை நெறிக்கு தேவையான அறிவூட்டல் ஆவணங்கள், எமது நூலக அங்கத்துவம் போன்றன இலவசமாக வழங்கப்பட்டன. கற்கை நெறியின் முக்கிய அம்சமாக ஒரு ஆய்வு கட்டுரை சமர்ப்பிக்கும்படியும் கேட்கப்பட்டது.

### வித்தியசமான எதிர்ப்புக்கள்

கேரளா -திருவானந்தபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பெண்கள் காற்சட்டை அணிவது இந்திய கலாச்சாரத்திற்கு எதிரானது என பிரபல பின்னணி பாடகர் யேசுதாஸ் தெரிவித்தார். இவரது கருத்தை இந்தியாவில் உள்ள பல பெண்கள் நிராகரித்துள்ளதுடன், எதிர்ப்பும் காட்டினர்.

இவரது கருத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில் கேரள பெண்கள் சிலர் வேட்டி அணிந்து அதை மடித்துக் கட்டி புகைப்படம் எடுத்து வெளியிட்டுள்ளனர்.

# துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்ட மேல்மாகாண சிறுவர்களுக்காகவிழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல்திட்டம்

அவுஸ்திரேலியாவின் நிதியுதவியுடன் ஏம்மால் ஜுலை 2015 தொடக்கம் இச் செயல்திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள காரணத்தினால் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் இந்த விடயம் தொடர்பாக முன்னுரிமை வழங்க தீர்மானித்தது. இது ஒரு வருட செயற்றிட்டமாகும். இதில் ஒரு பகுதியாக 5 வயது தொடக்கம் 11 வயது, 12 தொடக்கம் 16 வயதுக்கு கீழ்ப்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் மேற்கொள்கிறது. சிங்கள மொழிமூலமான இந்த அறிவூட்டும் திட்டத்தில் ஆசிரியர்களும், பெற்றோரும், மகளிர் அபிவிருத்தி அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொள்கிறார்கள். மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய இடங்கள் நாட்டில் அதிகமாக சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறும் இடமாக பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் சேகரித்த தகவலில் தெரியவருகிறது.

# ''பெண் தலைமைத்துவ குடும்பங்களின் முன்னேற்றம் குறித்த'' ஐ.நாவின் பெண்கள் செயற்றிட்டத்தின் மதிப்பீடு





ஐ.நாவினால் எமக்கு அளிக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் விதவைகள் மேம்பாட்டு செயற்றிட்டம் இக்காலப் பகுதியில் ஒரு மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டது. குறித்த நிகழ்ச்சி திட்ட கற்கைக்கான அளிக்கை புதுடில்லியில் 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்றபோது டில்லியில் உள்ள கராக் (Karak) என்னும் திட்டங்களை மதிப்பீடு செய்யும் ஒரு நிறுவனம் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தை மதிப்பீடு செய்பவர்களுக்கு உதவி புரியுமாறு கேட்டுக்கொண்டது.

புது டில்லியில் உள்ள மதிப்பீடு நிறுவனத்தினால் இந்த செய்முறையானது 2015 மே மாதம் இடம்பெற்றது. பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பில் மதிப்பீட்டு கராக் (Karak) நிறுவன வரவு செலவு திட்டத்தின் இணைப்பாளர்கள், மதிப்பீட்டாளர்களுடன் மட்டக்களப்பில் ஒருநாள் பயிற்சி செயலமர்வு மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மதிப்பீட்டாளர்களுக்கு இடம்பெற்றது.




மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து மதிப்பீடு தொடர்பான கூட்டுக் கலந்துரையாடல்கள்

இடம்பெற்றது. இந்த கலந்துரையாடல்களுக்கு பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பெண்கள் ஒருங் கணைக்கப்பட்டிருந்தனர். இந் நிகழ்வில் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தை சேர்ந்த கீதா தட்சணா மூர்த்தி மதிப்பீட்டு குழுவுடன் கிழக்கு மாகாணத்திற்கு சென்றதுடன் மொழிப்பெயர்ப்பாளராகவும் பிரதான ஒருங்கிணைப்பாளராகவும் மதிப்பீட்டு செயல்முறையில் பங்கேற்றார்.

# குறைந்த வருமானம் பெறும் பெண்களுக்கு பண உதவி

Nia Brathwaite, Jana Freund என்ற இரு பட்டதாரிகள் எம் நிறுவனத்தில் பயிற்சி பெற இணைந்திருந்தனர். இவர்கள் இருவரும் வறிய குடும்பங்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க தீர்மானித்தனர். அவர்கள் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க பொருளாதார ரீதியாக உதவி தேவைப்படும் இரு குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டது. முதலாவது குடும்பம் மாலதியையும் அவரின் மூன்று பாடசாலை மாணவர்களையும் உள்ளடக்கியது. உதவியாக கிடைத்த நிதியில் இருந்து அவர்களின் வீட்டு வாடகையை ஒன்றரை வருடத்திற்கு செலுத்தினோம். மாலதியின் மூன்று மகன்மாருக்கும் ஒரு வருடத்திற்குரிய மேலதிக வகுப்புக்கு தேவையான 51,000 ரூபாவை செலுத்த முடிந்தது. இவரின் இரு மகன்களும் ஹொக்கி விளையாடுவது தமது விருப்பம் என தெரிவித்திருந்தனர். இவர்கள் இருவரும் பாடசாலை ஹொக்கி குழுவில் உள்ளனர். இவர்களுக்கு ஹொக்கி விளையாட தேவையான பொருட்கள் வழங்கப்பட்டன.

இரண்டாவது குடும்பம் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட குடும்ப தலைவரையும் அவரது மனைவி,




மகனை உள்ளடக்கியது. குடும்பத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் கடந்த வருட நிதியில் இருந்து மனைவிக்கு தையல் இயந்திரம் ஒன்றை பெற்றுக் கொடுத்தோம். அத்தோடு அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களது அரசாங்க தொடர்மாடி வீட்டிற்கான ஒரு வருட வாடகையையும் செலுத்தினோம். அவர்கள் இந்த வாடகை பணத்தை செலுத்த பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்தார்கள். இரு குடும்பங்களும் அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ், தமது முன்பு குடியிருந்த சேரி வீடுகளை விட்டு அரச அடுக்கு மாடி குடியிருப்புக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

# பயிற்சிகளின் போது முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினைகள்

30ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2015 அன்று இரு AIESEC வெளிநாட்டு பயிற்சியாளர்கள் அளிக்கை ஒன்றை வழங்கினார்கள். பிரேசிலைச் சேர்ந்த Nathaly Calixto, ஜெர்மனியைச் சேர்ந்த Laura Koesterவும் இலங்கையைச் சேர்ந்த தர்மஜா தர்மராஜா (பட்டதாரி) கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியோர் பெண்கள் பயிற்சிகளின் போது முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினைகள் தொடர்பான தெளிவுபடுத்தினார்கள். இந்த அளிக்கையின் மூலம் தற்போது நாட்டில் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பார்வையாளர்களினால் கற்றுக்கொள்ள முடிந்தது.

# எமது வலைப்பதிவு

உங்களின் கருத்துக்குகளுக்கு நாங்கள் செவிசாய்க்க விரும்புகின்றோம். பால் நிலை தொடர்பான பிரச்சினைகளையும், பெண் உரிமை செய்பாடு அல்லது உங்களுக்கு முக்கியமான பெண் உரிமை பிரச்சினை, மகளிரியல் கற்கைகள், பெண்களும் ஊடகமும், சமூகவியல், மானிடவியல், இலக்கிய கற்கைகள் தொடர்பான பெண் நிலைகள், இன்னும் பலவற்றை பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் வலைப் பதிவில் பார்வையிடலாம்.



## நூலக வசதிகள்

எமது நூலகத்தில் சமூகவியல், பெண்ணியல், அரசியல், மனித உரிமைகள், மதம், தகவலூடல்கள் சம்பந்தமான நூல்கள், பருவ இதழ்கள், வீடியோ நாடாக்கள் முதலிய வற்றுடன் தமிழ், சிங்கள, ஆங்கிலத் தினசரிப் பத்திரிகை களின் செய்தித் துணுக்குகள் மும்மொழிகளிலும் வகைப் படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வாளர்கள், விரிவுரையாளர்கள், சமூகவியலாளர்கள், மாணவர்களுக்கு இவை மிகவும் பயனுள்ளவை. பிரதி செய்யும் வசதியும் உண்டு.

**வார நாட்களில் காலை 9.00 மணி முதல்**
**பி.ப 4.00 மணிவரை திறக்கப்பட்டிருக்கும்.**

**மதிய**
**போசனை**
**கலந்துரையாடல்**

மாதம் ஒரு முறை எம் நிறுவனத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் ஒரு முக்கியமான சமகால முரண்பாடுகள் அடங்கிய ஒரு விடயத்தை தெரிந்தெடுத்து அதனை ஏனையோருடன் கலந்துரையாடும் ஒரு நிகழ்ச்சியை நாம் செய்துவருகின்றோம். இதனால் பலதெளிவுகளையும், செய்திகளையும் நாம் பெறக்கூடியதாக இருக்கின்றது.

**மொழி பெயர்ப்பு வசதிகளைக் கொண்ட**
**பெண்கள் கல்வி ஆய்வுநிறுவன கேட்போர் கூடம்**

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தினது கருத்தரங்கு மண்டபம் 50 சொகுசு இருக்கைகளைக் கொண்டது. மற்றது சமகால மொழி பெயர்ப்புக் கருவிகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. உணவு, தேநீர் வசதி செய்து கொடுக்கப்படும். உங்கள் கூட்டம், கருத்தரங்கு, செயலமர்வு, படக் காட்சி, விழிப்புணர்வு நிகழ்ச்சி களுக்குத் தகுந்த வசதிகள் வழங்கப்படும்

## WERC Auditorium

| Hall Charges | A/C | Non A/C |
|---|---|---|
| Full Day (8 hrs) | 9,000 | 7,500 |
| Two hours | 3,750 | 2,500 |
| For every additional hr. | 800 | 550 |

**Facilities**

| | |
|---|---|
| Television | 400 |
| VCR | 300 |
| Over Head Projector | 300 |
| Multi-Media Projector | 5000 |
| Mics (each) | 75 |
| Simultaneous Translation Unit | 5000 |
| Head Phone (each) | 300 |

Service Charges 10% of the Total Amount
Maximum seating capacity – 50

Ample parking space.


பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
58, தர்மராம வீதி, கொழும்பு - 06
தொலைபேசி: 2595296, 2590985
தொலைநகல்: 2596313



தொகுப்பு : ஹம்சகௌரி சிவஜோதி



Women's Education and Research Centre
58, Dharmarama Road,
Colombo 6, 00600, Sri Lanka
T.P. : +94-11-2595296/ +94-11-2590985
Fax : +94-11-2596313
E-mail : womedre@gmail.com
womedre1@gmail.com
werc1982@gmail.com
Web : www.wercsl.org


To: ......................................................

......................................................

......................................................

......................................................